**களணி பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களணி பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 8,399,570 தொகை மற்றும் ரூபா 7,000,000 தொகையான மின் பிறப்பாக்கி என்பவற்றின் பெறுமதி 03 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 15 செயற்திட்டங்களுக்குரிய கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகள் ரூபா 2,937,741 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | களஞ்சிய இருப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 552,080 பெறுமதியான 07 பொருள் வகைகள் ஏனைய அலுவலக உபகரணமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 10 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகைக்கும் பட்டோலைகளின் பிரகாரமான அந்த மீதிகளின் கூட்டுப் பெறுமதிக்கும் இடையே ரூபா 215,394,962 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள், பட்டோலைகள் மற்றும் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ஆதன வரி மற்றும் வியாபார நிலைய வாடகை முறையே ரூபா 27,817,847 தொகை மற்றும் ரூபா 508,493 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் முறையே ரூபா 36,737,134 மற்றும் ரூபா 637,533 ஆக ரூபா 9,048,327 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | நிலுவை வருமான அறிக்கை மற்றும் பட்டோலைகளை சரியாக தயாரித்தல் வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மூலதனத்திற்கான வருமான பங்களிப்பு மற்றும் நன்கொடை கணக்குகளின் கூட்டுத்தொகைக்கும் நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 439,450 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.3 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 568,125,061 தொகையான 07 கணக்குகளுக்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய சரிசெய்தல்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் மதிப்பீட்டு சட்டம். | ஆதன வரி 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், இறுதியாக ஆதன வரி 2009 ஆம் ஆண்டிலேயே மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 12 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 735,540 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபையின் ஆலோசனை | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மெய்மெய்யாய்வு அறிக்கையில் காட்டப்பட்ட ரூபா 433,585 பெறுமதியான காணாமல்போன | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | |
|---|---|
| சுற்றறிக்கை இலக்கம் 2004/நூலகம்/1 ஆம் இலக்கம். | புத்தகங்கள் முறையே 1518 மற்றும் 2308 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.5 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறவேண்டிய வேலை உதவிகள் ரூபா 141,727,596 ஆக இருந்ததுடன், 1997 முதல் 2019 வரையான காலப் பகுதிக்குரிய முற்கொடுப்பனவுகள் ரூபா 5,752,474 ஆகும். | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய அங்கீகாரத்தை பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 94,173,429 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 93,491,106 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 87,700,000 | 61,005,442 | 64,768,811 | 33,307,597 | 50,000,000 | 53,020,745 | 51,059,743 | 25,765,547 |
| (ii) | வாடகை | 23,215,935 | 22,058,310 | 20,473,763 | 7,960,721 | 10,260,959 | 18,111,609 | 17,833,358 | 5,572,653 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,851,000 | 1,781,630 | 3,583,259 | 0 | 1,600,000 | 1,790,236 | 1,790,236 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 314,901,500 | - | 273,368,931 | 1,458,347 | 273,198,000 | 273,198,000 | 259,794,989 | - |
| | | 429,668,435 | 84,845,382 | 362,194,764 | 42,726,665 | 335,058,959 | 346,120,590 | 330,478,326 | 31,338,200 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 36,737,139 தொகையான ஆதன வரி நிலுவை மீதியில் 01 வருத்திற்கு குறைவான ரூபா 9,807,809 தொகையும், 1 – 3 வருடங்களுக்கு இடையிலான ரூபா 7,521,186 தொகையும், 03 – 05 வருடங்களுக்கு இடையிலான ரூபா 5,738,969 தொகையும், 05 – 10 வருடங்களுக்கு இடையிலான ரூபா 9,517,119 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,152,053 தொகையும் காணப்பட்டது. | நிலுவை ஆதன வரியை அறவிடும் வழிமுறைகளை அதிகரித்தல், ஆதனங்களை தடைசெய்யும் அறிவித்தலை விநியோகித்து நிலுவை ஆதன வரியை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். | தற்போது ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன், சட்டரீதியாக அறவிட முடியுமான பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கையும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. |

### 2.2.3 கடை வாகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பா 31 ஆம் திகதி வரையில் 133 கடைகளுக்குரியதாக காணப்பட்ட ரூபா 2,785,707 தொகையான நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | தொரண சந்தியில் கிரிபத்கொட பொதுச் சந்தை மற்றும் ஹுணுப்பிட்டிய புதிய சந்தை என்பவற்றில் 22 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது சபையினால் ரூபா 100 முதல் ரூபா 3,100 வரையான மதாந்த வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகள் வாடகையாளரினால் ரூபா 3,500 முதல் ரூபா 15,000 வரையான மாதாந்த வாடகையில் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உப வாடகைக்கு கையளிப்பதற்கு முடியாத உப விதிகளை வதித்து வாடகைக்கு கையளிப்பதற்கு எதிர்காலத்தின் போது நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 ஏனைய வருமானம்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட 03 தொழில் முயற்சிகளுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திர வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 03 நிறுவனங்களின் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்காக விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 08 செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | நிறைவேற்ற வேண்டிய பணிகள் சகலதும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 04 பல்வேறு இலக்குகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 17 மில்லியன் தொகை வருடாந்த பாதீட்டில் | செயற்திட்டங்களை சரியான பிரகாரம் பூர்த்திசெய்து கொள்வதற்கு | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய இலக்குகளை நிறைவேற்றுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்த போதும், அந்த பணத்தை செலவிட்டு பூர்த்தி மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | |

**(இ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ரூபா 27,983,429 தொகை செலவில் களணி பேருந்து நிலைய கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. உரித்தை உறுதிப்படுத்தாமல் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டு முதல் சபைக்கு கைப்பற்றக் கூடியதாக இருந்த நலன்கள் 2019 ஆம் ஆண்டு வரையிலும் இழக்கப்பட்டிருந்தது. | உரித்தை உறுதிப்படுத்தாமல் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட முடியாது. | தயாரிக்கப்பட்ட நில வரைபடம் 2019 மே 09 ஆம் திகதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. உரிய மதிப்பீடு கிடைத்த பின்னர் களணி விகாரையுடன் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருட்களை அகற்றும் செயற்பாடுகளின் போது கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்படுகின்ற இடத்திற்கு ரூபா 22,500,000 தொகையும் வாகனங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 14,761,000 தொகையான செலவினமும் செய்யப்பட்டிருந்ததுடன், கழிவுகளை போக்குவரத்து செய்வதற்காக சபைக்குச் சொந்தமான வாகனங்கள் ஈடுபடுத்தப்படாமல் வாடகை வாகனங்கள் பெற்றுக்கொள்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 12,413,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான வாகனங்களில் இருந்து உச்ச பயன்பாடு பெறப்பட வேண்டும். | நாளாந்தம் சபை மூலம் 55 – 60 தொன் இற்கு இடையிலான கழிவுப் பொருட்களின் அளவு சேகரிக்கப்படுகின்றது. அதனால் முத்துராஜவல கழிவு நிலத்திற்கு கழிவுப் பொருட்களை அனுப்புவதற்காக டிப்பர் வாகனத்தை ஈடுபடுத்த வேண்டியிருந்தது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் நிலையில் 04 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2018/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களை மேவுகை செய்யும் வகையில் ஊழியர் பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பயிற்சிகளை நாளதுவரையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுப்புவதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். 2020 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2016, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இடம் மாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 249,340 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட போதிலும், 25 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான சகல ஆதனங்களையும் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட மதிப்பீட்டு சபையினால் சபைக்குச் சொந்தமான ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மெய்மெய்யாய்வின் பிரகாரம் 04 | நிலையான சொத்துப் பதிவேட்டை | இந்த பரிந்துரையை அமுல்படுத்துவதற்காக மீள்மதிப்பீட்டு சபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | காணி மற்றும் கட்டிடங்கள், 02 விளையாட்டு மைதானங்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளது. |

**3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் மெய்மெய்யாய்வின் மூலம் இனங்காணப்பட்ட 57 காணி மற்றும் கட்டிடங்களுக்கு இடையே உரித்துறுதி காணப்படாத 43 காணிகள் காணப்பட்டன. இந்த ஆதனங்களுக்காக திட்டம் மாத்திரம் சபைக்குச் சொந்தமாக காணப்பட்டதுடன், 05 ஆதனங்களுக்காக எந்தவொரு ஆவணமும் காணப்படவில்லை. | சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை அங்கீகரித்த பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணிகளுக்காக நில வரைபடம் மற்றும் உரித்துறுதி என்பவற்றை தயாரிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கிரிபத்கொட ஜினதாஸ நந்தசேன மாவத்தையில் அமைந்துள்ள திரிகோணாகார காணியில் அனுமதியற்ற நிர்மாணம் மற்றும் நாஹேன பிரத்திபுற வீடமைப்பு திட்டத்தில் பொது கிணறு மூடப்பட்டு அடுத்தாலுள்ள காணி உரிமையாளர் தமது காணிக்கு உரித்தாக்கிக் கொள்ளல் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் பொது கிணறுகளை மூடுதல் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியில் அனுமதியற்ற நிர்மாணங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (இ) | வெதமுல்ல கிங்ஸ்டன் காணி மற்றும் வெதமுல்ல பிலபிட்டிய கோன்கஹவத்த என்ற காணி அமைந்துள்ள இடத்தைக் கண்டுபிடிப்பதற்கேனும் முடியாத வகையில் வெளித்தரப்பினரினால் கைப்பற்றப்பட்டிருந்தது. தழுகம மயான நிலத்திற்கு அருகில் உள்ள காணியில் தற்போது விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | சபை காணிகளை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெதமுல்ல கிங்ஸ்டன் விலாஸ் காணி / வெதமுல்ல பிலப்பிட்டிய கோன்கஹவத்த காணி என்ற இடங்கள் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட போதிலும் அந்த காணிகளை பௌதீக ரீதியில் இனங்காண முடியாதிருந்தது. |
| (ஈ) | நாஹேன சிரிபுற விளையாட்டு அரங்கு, குறுன்னான்சேவத்த வீடமைப்பு தொகுதியில் காணப்பட்ட விளையாட்டு | உரிய விளையாட்டு அரங்கு மற்றும் சிறுவர் பூங்கா | இந்த காணியை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மைதானம் மற்றும் சிறுவர் பூங்கா என்பன காணப்படாதிருந்ததுடன், ஒரு விளையாட்டு மைதானத்தில் புத்தர் சிலையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | என்பவற்றை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்படுகின்றது. |

## 3.6 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 08 தொன் வீதி செப்பனிடுகைகள், பாச் இயந்திரம், ஸ்கவேட்டர் இயந்திரம் மற்றும் டம்ப் டெக்டர் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதிச் செப்பநிடுகையை வேறொரு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 இன் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான இலக்கமின்றிய 09 டெக்டர் டேலர்கள், பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய 02 டேலர் செசிகள் மற்றும் கை டெக்டர் என்பன காணப்பட்டன. | உரிய டேலரை பழுதுபார்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 டேலர்கள் தற்போது பழுதுபார்க்கப்படுகின்றது. |
| (இ) | பொல்ஹேன நூலகத்தின் மேல் மாடி எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாடான பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டிடம் இது வரையும் பிரதேச செயலகத்திற்கு சொந்தமாக காணப்படுகின்றமையினால் அதன் உரித்தை கையேற்றதன் பின்னர் அதனை பல்நோக்கு கட்டிடமாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 3.7 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் ரூபா 885,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 05 கணனி இயந்திரங்கள் மற்றும் ரூபா 762,575 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 04 மடி கணனிகள் என்பவற்றிக்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9(ஆ) பந்தியின் பிரகாரம் உரிய நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வீதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 42,044,858 மற்றும் பக்க வடிகாண்கள் மற்றும் மதகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,608,116 என்பன செலவின விடயங்களை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. | செலவின விடயங்களை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட முடியாது. | 2019 செப்தெம்பர் 20 ஆம் திகதிய விஷேட பொதுக் கூட்டத்தினால் ஏகமனதான சபை அங்கீகாரத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |